# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 28/ந/2025
நாள்:. 19.06.2025

திரு.A.தேவேந்திரன்,
திருப்போரூர், செங்கல்பட்டு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மறைமலைநகர் நகராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம். – எதிர்மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தாலுகா, கீழூர், பிரதானசாலை எண்.42 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. தேவேந்திரன் என்பவரின் 20.11.2024 நாளிட்ட மனு 21.11.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 28/ந/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டுமனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தாலுகா, கீழூர், பிரதானசாலை எண்.42 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஏ. தேவேந்திரன் என்பவர் தனது 20.11.2024 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.9, NH-3 அண்ணா சாலையில் M/s.MAHLE ENGINE COMPONENTS INDIA PVT. LTD., என்ற தொழிற்சாலை உள்ளது.

பல ஆண்டு காலமாக இந்நிறுவத்தின் வெளியே இருந்த மரத்தின் நிழலில் இத்தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் இதர வாகன ஓட்டிகள் இம்மரத்தின் நிழலை வாகனம் நிறுத்த பயன்படுத்தி வந்தனர்.

இந்நிறுவனம் சமீப காலமாக சாலையை ஆக்கிரமிக்கும் நோக்கத்தோடு சாலை ஓரங்களில் குண்டு கற்களை கொட்டுவது குப்பைகளை கொட்டுவது போன்ற பொது தொல்லையில் ஈடுபட்டு வந்தனர்.

சாலை ஓரங்களில் கற்களும், குப்பைகளும் கொட்டி ஆக்கிரமிப்பு செய்ததால் சாலையில் நெரிசல் ஏற்பட்டு விபத்துகள் அடிக்கடி நடக்கின்றது.

கடந்த 31.08.2024 அன்று M/s. MAHLE ENGINE COMPONENTS INDIA PVT. LTD., நிறுவனத்தின் வெளியே இருந்த 6 புங்க மரத்தை மோட்டார் பொருத்திய வாள் கொண்டு துண்டு துண்டாக வெட்டப்பட்டுள்ளது. இச்செயல் கண்டனத்துக்குரியது. இந்நிறுவனத்துக்கு எந்த விதத்திலும் சொந்தமில்லாத பொது இடத்தில் இருந்த மரத்தை வெட்டியது சட்டத்துக்கு புறம்பானது.

மாவட்ட நிர்வாகம் துரிதமாக கள விசாரணை மேற்கொண்டு இயற்கை வளங்களை அழிக்கும் நோக்கத்தோடு செயல்பட்ட நபர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்து மரத்தை வெட்டிய நிறுவனத்திற்கு தண்டம் விதித்து இந்நிறுவனத்தின் மீது நடவடிக்கை மேற்கொண்டு வெட்டப்பட்ட இடத்தில் மரக்கன்றுகளை நட்டு பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.02.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் மறைமலைநகர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. மறைமலைநகர் நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண். 547/2025/இ2, நாள் 10.03.2025–ல் காணும் அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

"மறைமலைநகர் நகராட்சி அறிவிப்பு கடித ந.க.எண். 547/2025/இ2, நாள் 19.02.2025–ன்படி மேற்படி நிறுவனம் நகராட்சிக்கு சொந்தமான சாலையில் உள்ள 6 பசுமை மரங்களை அனுமதியின்றி வெட்டி அகற்றப்பட்டதற்கு மரம் ஒன்றிற்கு ரூ. 25000/– வீதம் 6 மரங்களுக்கு ரூ. 1,50,000/– செலுத்தவும், மேலும் புவி வெப்பமயமாவதை தடுக்கும் நோக்கிலும், பொதுமக்கள் நலன் கருதியும் மேற்படி நிறுவனத்தின் மூலம் வெட்டப்பட்ட 6 மரங்களுக்கு ஈடாக 60 மரக்கன்றுகளை நட்டு மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பராமரித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை இதன்மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மறைமலைநகர் நகராட்சி ஆணையரின் அறிவிப்பு ந.க.எண். 547/2025/இ2, நாள் 19.02.2025–ல் பொது மேலாளர், M/s. Mahle Engine Components Pvt. Ltd., நிறுவனத்திற்கு முகவரியிடப்பட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிட்டு அறிவிப்பு அனுப்பியுள்ளதாக மேற்படி அறிவிப்பில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மறைமலைநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9, அண்ணாசாலையில் அமைந்துள்ள தங்கள் M/s. Mahle Engine Components Pvt. Ltd., நிறுவனத்தால், தொழிற்சாலையின் முன்புறம் சாலையில் உள்ள 6 பசுமை மரங்களை (புங்கன் மரம்) நகராட்சி அனுமதியின்றி தன்னிச்சையாக வெட்டி அகற்றப்பட்டுள்ளது குறித்து மக்கள் சட்ட விழிப்புணர்வு இயக்கத்தினர் குறைகேள் அலுவலர் உள்ளாட்சி துறை அவர்களுக்கு புகார் மனு அளிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட குறைகேள் அலுவலர் மரம் வெட்டி அகற்றப்பட்ட தொழிற்சாலையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து 15 தினங்களுக்குள் அறிக்கை அனுப்பிவைக்க தெரிவித்துள்ளார்.

எனவே தங்கள் நிறுவனம் நகராட்சிக்கு சொந்தமான சாலையில் உள்ள 6 பசுமை மரங்களை அனுமதியின்றி வெட்டி அகற்றப்பட்டதற்கு மரம் ஒன்றிற்கு ரூ.25,000/– வீதம் 6 மரங்களுக்கு ரூ.1,50,000/–த்தினை வங்கி வரைவோலையாக The Commissioner,

Maraimalai Nagar Municipality என்ற பெயருக்கு இவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் வெட்டப்பட்ட 6 மரங்களுக்கு ஈடாக புவி வெப்பமயமாவதை தடுக்கும் நோக்கிலும், பொதுமக்கள் நலன் கருதியும் தங்கள் நிறுவனத்தின் மூலம் 60 மரக்கன்றுகள்நட்டு மூன்றாண்டுகள் தொடர்ந்து பராமரித்திடவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மறைமலைநகர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 11.03.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 06.03.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் திரு. ஏ. தேவேந்திரன் என்பவர் 11.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"M/s. MAHLE ENGINE COMPONENTS INDIA PVT. LTD., என்ற தொழிற்சாலையினர் மறைமலைநகர் நகராட்சிக்கு சொந்தமான சாலையில் உள்ள 6 புங்க மரங்களை சட்டத்திற்கு புறம்பாக வெட்டி உள்ளனர்.

இது தொடர்பாக புகார் அளித்ததனால் ஆட்களை வைத்து என்னை மிரட்டுகின்றனர்.

செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2024 மாதங்களிலும் இது தொடர்பாக நகராட்சிக்கு புகார் அளித்திருக்கிறேன். ஆனால் எந்தவித நடவடிக்கையும் நகராட்சியினரால் எடுக்கப்படவில்லை. இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் அளித்த பின்னர், மேற்படி நிறுவனத்திற்கு ரூ.1.50 இலட்சம் நகராட்சியால் அபராதம் விதித்துள்ளதாகவும் இன்று விசாரணைக்கு வந்த பின் அறிந்து கொண்டேன். ஆனால் மேற்படி நிறுவனம் அபராத தொகையை நகராட்சிக்கு செலுத்தவில்லை என்பதையும் தெரிந்து கொண்டேன்.

மேற்படி அபராத தொகையை வசூல் செய்வதற்கும், உரிய நடவடிக்கையை நகராட்சி நிர்வாகம் மேற்கொண்டு எனது புகார் மனுவின் மீது தீர்வு காணுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான மறைமலைநகர் நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண். 547/2025/இ2, நாள் 10.03.2025–ல் 11.03.2025 அன்று செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெறுவதால், 11.03.2025ம் தேதிய விசாரணையில் தன்னால் ஆஜராக இயலவில்லை என தெரிவித்து, தனது சார்பாக மறைமலைநகர் நகராட்சியில் இளநிலை பொறியாளராகப் பணிபுரியும் திருமதி. கௌரி என்பரை 11.03.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் ஆஜராக அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, மறைமலைநகர் நகராட்சியில் இளநிலை பொறியாளராகப் பணிபுரியும் திருமதி. கௌரி என்பவர் 11.03.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

"நகராட்சிக்கு சொந்தமான சாலையில் உள்ள 6 பசுமை மரங்களை அனுமதியின்றி வெட்டி அகற்றப்பட்டதற்கு M/s. MAHLE ENGINE COMPONENTS INDIA PVT. LTD., என்ற நிறுவனத்திற்கு அனுமதியின்றி மரங்கள் வெட்டி அகற்றப்பட்டதற்கு மரம்

ஒன்றிற்கு ரூ.25,000/– வீதம் 6 மரங்களுக்கு ரூ.1,50,000/–த்தினை வங்கி வரைவோலையாக The Commissioner, Maraimalai Nagar Municipality என்ற பெயருக்கு அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 7 நாட்களுக்குள் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

அதனை தொடர்ந்து 23.02.2025 அன்று மேற்படி நிறுவத்திற்கு நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டு தொடர்ந்து 02.03.2025 அன்று மீண்டும் மேற்படி அபராத தொகையை செலுத்துமாறும் மேற்படி நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது.

இதுவரை மேற்படி நிறுவத்திலிருந்து இது தொடர்பாக எந்தவித பதிலும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, மேற்படி நிறுவனத்திற்கு இறுதி அறிக்கை அளிக்கப்பட்ட உரியகாலத்திற்குள் அபராத தொகை செலுத்தப்படாதபட்சத்தில் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்படி நடவடிக்கைகள் அனைத்தும் இன்னும் 15 தினங்களுக்குள் மேற்கொள்ளப்பட்டு, இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

8. எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான மறைமலைநகர் நகராட்சியில் பணிபுரியும் இளநிலை பொறியாளரால் 11.03.2025–ஆம் தேதிய வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டவாறு, மறைமலைநகர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க. எண். 547/2025/இ2, நாள் 09.06.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு விவரத்தினை தெரிவித்துள்ளார்.

"மக்கள் சட்ட விழிப்புணர்வு இயக்கத்தால் வார்டு எண்.9 அண்ணா சாலையில் அமைந்துள்ள M/s. Mahle Engine Components India Pvt. Ltd., தொழிற்சாலையின் முன்புறம் சாலையில் உள்ள 6 பசுமை மரங்களை (புங்கன் மரம்) மரங்களை வெட்டியதாக புகார் அளிக்கப்பட்டதை தொடர்ந்து, வெட்டப்பட்ட ஆறு மரங்களுக்கு பதிலாக ஒரு மரத்திற்கு ரூ.25,000/– என ரூ.1,50,000/– யை நகராட்சி வசம் செலுத்தவும், மேலும் 6 மரங்களுக்கு ஈடாக புவி வெப்பமாவதை தடுக்கும் நோக்கிலும் 60 மரக்கன்றுகள் நட்டு மூன்றாண்டுகள் பராமரிக்க அறிவுறுத்தப்பட்டு அதன் விவரமானது 11.03.2025 அன்று உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்றத்தில் நேரடியாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மேற்படி M/s. Mahle Engine Components India Pvt. Ltd., என்ற நிறுவனத்தின் கடிதத்தில் மரங்கள் வெட்டப்பட்ட சம்பவத்திற்கும் தங்கள் நிறுவனத்திற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை எனவும், மேலும் ஆண்டுதோறும் 20 முதல் 30 மரங்கள் தங்கள் நிறுவனத்தால் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்துள்ளனர். இதனை தொடர்ந்து மேற்படி நிறுவத்தினை ஆய்வு செய்ததில் அவர்கள் அங்குள்ள மின்வழித்தடத்தில் மரக்கிளைகள் உராய்வு ஏற்படுவதால் மின்கசிவு ஏற்பட்டு அடிக்கடி மின்துண்டிப்பு ஏற்படுவதால் மேற்படி மரக்கிளைகள் மின்யவாரியத்தின் மூலம் வெட்டப்பட்டது என தெரிவித்தனர். மேலும் வெட்டப்பட்ட மரங்களானது நிலத்தில் இருந்து நான்கு அடி உயரத்திற்கு விடப்பட்டு அதற்கு மேல் வெட்டப்பட்டுள்ளது என்பதை பார்வையிடப்பட்டது. அம்மரங்கள் அந்நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு சுமார் 7 அடி உயரம் வரை வளர்ந்து செழுமையாக உள்ளது. அதன் தற்போதைய புகைபடம் இத்துடன் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இருப்பினும் மேற்படி நிறுவனத்தால் நகராட்சி விதித்த அபராதத் தொகையில் அரசு தலைப்பில் ரூ.60,000/– (020/01/3/25–26/0004368 நாள் 09.06.2025) செலுத்தப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

9. மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான மறைமலைநகர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய இதர ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் நகராட்சி, வார்டு எண்.9, NH-3 அண்ணா சாலையில் இயங்கிவரும் M/s. MAHLE ENGINE COMPONENTS INDIA PVT. LTD., என்ற தொழிற்சாலை கடந்த 31.08.2024 அன்று அந்நிறுவனத்தின் வெளியே பொது இடத்தில் இருந்த 6 புங்க மரத்தை மோட்டார் பொருத்திய வாள் கொண்டு துண்டு துண்டாக வெட்டப்பட்டுள்ளதாகவும், இயற்கை வளங்களை அழிக்கும் நோக்கத்தோடு மரத்தை வெட்டிய நிறுவனத்திற்கு தண்டம் விதித்து, வெட்டப்பட்ட இடத்தில் மரக்கன்றுகளை நட்டு பாதுகாக்க தக்க வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றில் M/s. Mahle Engine Components India Pvt. தொழிற்சாலையின் முன்புறம் சாலையில் உள்ள 6 பசுமை மரங்களை (புங்கன் மரம்) வெட்டியதற்காக மரம் ஒன்றிற்கு ரூ.25,000/– வீதம் 6 மரங்களுக்கு ரூ.1,50,000/–யை நகராட்சியில் செலுத்தவும், புவி வெப்பமயமாவதை தடுக்கும் நோக்கில் 60 மரக்கன்றுகளை நட்டு மூன்றாண்டுகள் பராமரிக்கவும் M/s. Mahle Engine Components India Pvt. Ltd, நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ள விவரம் கண்டறியப்பட்டது.

M/s. Mahle Engine Components India Pvt, Ltd., நிறுவனத்தினை நகராட்சியினரால் ஆய்வு செய்ததில் அவர்கள் அங்குள்ள மின்வழித்தடத்தில் மரக்கிளைகள் உராய்வதால் மின்கசிவு ஏற்பட்டு அடிக்கடி மின்துண்டிப்பு ஏற்படுவதால் மேற்படி மரக்கிளைகள் மின்வாரியத்தின் மூலம் வெட்டப்பட்டதாக மேற்படி நிறுவனத்தினர் தெரிவித்துள்ளதாகவும், வெட்டப்பட்ட மரங்களானது நிலத்தில் இருந்து நான்கு அடி உயரத்திற்கு மேல் வெட்டப்பட்டுள்ளதை நகராட்சி நிர்வாகத்தினரால் பார்வையிடப்பட்டதாகவும், தற்போது அம்மரங்கள் மேற்படி நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு சுமார் 7 அடி உயரம் வரை வளர்ந்து செழுமையாக உள்ளதாக நகராட்சி ஆணையரின் அறிக்கை வாயிலாக தெரியவருகிறது. மேலும், மேற்படி நிறுவனம் நகராட்சி விதித்த அபராதத் தொகையில் ரூ.60,000/– (020/01/3/25–26/0004368 நாள் 09.06.2025) அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்து அதற்கான ரசீது நகல் நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் நகராட்சி ஆணையர் சார்பில் ஆஜரான நகராட்சி பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றில் 6 பசுமை மரங்கள் M/s. Mahle Engine Components India Pvt நிறுவனத்தினரால் வெட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது அவை மின் வாரியத்துறையினரால் வெட்டப்பட்டுள்ளதாக மேற்படி நிறுவனம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நகராட்சி ஆணையர் தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். நகராட்சி ஆணையர் விசாரணைக்கு முன்னரே ஆய்வு மேற்கொண்டு தெளிவான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்திருக்க வேண்டும். இது போன்று முன்னுக்கு பின் முரணான கருத்துகள் தெரிவித்தமைக்கு இம்முறைமன்ற நடுவம் தனது கண்டனத்தை தெரிவிக்கிறது.

மேலும், M/s. Engine Components India Pvt. தொழிற்சாலையின் முன்புறம் சாலையில் உள்ள 6 பசுமை மரங்களை (புங்கன் மரம்) வெட்டியது தொடர்பாக வருவாய் துறையுடன் கலந்து ஆலோசித்து, அரசுக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படாத வண்ணம் உரிய நடவடிக்கை

மேற்கொள்ளுமாறு, மறைமலைநகர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்திலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவெடுத்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

**2025–ஆம் ஆண்டு, ஜுன் 19 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.**

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. ஏ.தேவேந்திரன்,
   எண்.42, பிரதானசாலை,
   கீழூர், திருப்போரூர் தாலுகா,
   செங்கல்பட்டு மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
   மறைமலைநகர் நகராட்சி, மறைமலைநகர்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், MRC நகர், சென்னை–600 028.

4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பு
   அலுவலர்(Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
   MRC நகர், சென்னை – 600 028.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்